பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 06 2025 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நிதி தொழில்நுட்பங்கள் இந்திய நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. ஹிமாச்சலப்பிரதேசத்தில் 2023ஆம் ஆண்டு நிகழ்ந்த இயற்கைப் பேரிடர் சம்பவங்களுக்குப் பிறகு மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பு திட்டத்திற்காக மத்திய அரசு 2 ஆயிரத்து 6 கோடி ரூபாய் வழங்க உள்ளது.

3. சர்வதேச யோகா நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. மும்பை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் நேற்று மாலை முதல் பெய்த கனமழை காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

5. தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மதுரைஅணி 10 ரன் வித்தியாசத்தில் நெல்லை அணியை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

நிதி தொழில்நுட்பங்கள் இந்திய நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற மின்னணு பணப்பரிவர்த்தனை விருது வழங்கும் நிகழ்ச்சியில் அவர் கலந்துகொண்டார்.

நாட்டில் அடுத்த 4 ஆண்டுகளில் நிதி தொழில்நுட்ப சந்தை 400 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பூடான், பிரான்ஸ், மொரீஷியஸ், நேபாளம், சிங்கப்பூர், இலங்கை மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் யு.பி.ஐ பரிவர்த்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மின்னனு பணப் பரிவர்த்தனையில் சிறப்பாக செயல்பட்டதற்காக பொதுத்துறை வங்கிகள் பிரிவில் பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு முதல் பரிசையும், பரோடா வங்கிக்கு இரண்டாம் பரிசையும், யூகோ வங்கிக்கு மூன்றாம் பரிசையும் அவர் வழங்கினார்.

தனியார் வங்கிகள், சிறு நதி வங்கிகள், மின்னனு பணப் பரிவர்த்தனை வங்கி மற்றும் நிதி தொழில்நுட்ப பிரிவுகளிலும் திருமதி நிர்மலா சீதாராமன் விருது வழங்கினார்.

<<<<>>>>

மத்திய அரசின் ஆபரேஷன் சிந்து மூலம் ஈரானில் இருந்து மீட்கப்பட்ட 110 இந்திய மாணவர்கள் அதிகாலை புதுதில்லி வந்தடைந்தனர்.

ஈரான் - இஸ்ரேல் போர் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள ஈரானின் வடக்குப் பகுதியில் பயின்று வரும் இந்த மாணவர்கள் ஆபரேஷன் சிந்து மூலம் முதற்கட்டமாக சிறப்பு விமானம் அனுப்பி வைக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக வடக்கு ஈரான் பகுதியில் இருந்து அந்த மாணவர்கள் ஈரான் மற்றும் அர்மேனியாவில் உள்ள இந்திய தூதரகங்களின் மூலம் அர்மேனிய தலைநகர் **Yerevan** பகுதிக்கு சாலை வழியாக பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் அவர்கள் நேற்று பிற்பகல் அங்கிருந்து சிறப்பு விமானம் மூலம் புறப்பட்டு இன்று அதிகாலை புதுதில்லி வந்தடைந்தனர்.

மாணவர்களை பாதுகாப்பாக மீட்பதற்கு உதவிபுரிந்ததற்காக ஈரான் மற்றும் அர்மேனிய அரசுகளுக்கு மத்திய அரசு நன்றி தெரிவித்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் ஈரானில் வசிக்கும் இந்தியர்கள் தலைநகர் டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்புகொள்ளுமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

9 8 9 1 2 8 1 0 9 1 1 5

மற்றும்

9 8 9 1 2 8 1 0 9 1 0 9 என்ற உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதற்கிடையே சிறப்பு விமானம் அனுப்பி தங்களை பாதுகாப்பாக மீட்டதற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக டெஹ்ரானில் இளநிலை மருத்துவ படிப்பு பயின்று வரும் மாணவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் 2023ஆம் ஆண்டு நிகழ்ந்த இயற்கைப் பேரிடர் சம்பவங்களுக்குப் பிறகு மேற்கொள்ளப்படும் மீட்பு மற்றும் மறுசீரமைப்பு திட்டத்திற்காக மத்திய அரசு 2 ஆயிரத்து 6 கோடி ரூபாய் வழங்க உள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதில் ஆயிரத்து 504 கோடி ரூபாய் தேசிய பேரிடர் மீட்பு நிதியின்கீழ் வழங்கப்படும்.

முன்னதாக 2023ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் தேதியன்று நிகழ்ந்த பேரிடரால் பாதிக்கப்பட்ட ஹிமாச்சலப்பிரதேசத்திற்கு தேசிய பேரிடர் மீட்பு நிதியில் இருந்து 633 கோடி ரூபாய் கூடுதல் நிதி வழங்க உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.

கடந்த நிதியாண்டில் மாநில பேரிடர் மீட்பு நிதியின்கீழ் 28 மாநிலங்களுக்கு 20 ஆயிரத்து 264 கோடி ரூபாயும், தேசிய பேரிடர் மீட்பு நிதியின்கீழ் 19 மாநிலங்களுக்கு 5 ஆயிரத்து 160 கோடி ரூபாயையும் மத்திய அரசு விடுவித்துள்ளது.

<<<<>>>>

சர்வதேச யோகா தினம் நாளை மறுநாள் கொண்டாடப்பட உள்ள நிலையில், நாடு முழுவதும் யோகா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த விழிப்புணர்வின் காரணமாக பல்வேறு நாடுகளில் யோகாசனப் பயிற்சிகளை பலர் பின்பற்றி வருவதாக தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த யோகா பயிற்சியாளர் திரு. ரமேஷ் தியாகராஜன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**(Voice Byte – Ramesh Thyagarajan – 20 Sec)**

யோகா பயிற்சிகள், பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள், முதியோர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் பல்வேறு நன்மைகளை அளிப்பதாக சமூக ஆர்வலர் முனைவர் திரு. தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

**(Voice Byte – Dhakshinamoorthy – 20 Sec)**

<<<<>>>>

நான்கு மாநிலங்களில் 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இன்று இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

குஜராத்தில் **Kadi** மற்றும் **Visavadar** ஆகிய 2 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

கேரளாவில் நிலாம்பூர் சட்டப்பேரவைத் தொகுதிக்கும், பஞ்சாபில் லூதியானா சட்டப்பேரவைத் தொகுதிக்கும், மேற்கு வங்கத்தில் கலிகஞ்ச் சட்டப்பேரவைத் தொகுதிக்கும் இன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

வாக்கு எண்ணிக்கை வரும் 23ஆம் தேதி நடைபெற உள்ளது.

<<<<>>>>

சமையல் எண்ணெய்க்கான இறக்குமதி வரியை மத்திய அரசு அண்மையில் குறைத்துள்ள நிலையில் அதன் பயன் நுகர்வோரை சென்றடையும் வகையில் சமையல் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் பதப்படுத்தும் ஆலைகளில் மத்திய அரசு அதிகாரிகள் தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மகராஷ்டிரா ஆந்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், குஜராத் மாநிலங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக மத்திய நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மும்பை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் நேற்று மாலை முதல் பெய்த கனமழை காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

20 சென்டி மீட்டர் அளவுக்கு மழை பெய்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ரயில் பாதைகளில் தண்ணீர் தேங்கியதால் பல்வேறு ரயில்கள் தாமதமாக இயக்கப்பட்டன. சில ரயில்களின் சேவை ரத்து செய்யப்பட்டது.

இதனால் சாலைப் போக்குவரத்தும் முடங்கியது. சில பகுதிகளில் மரங்கள் சாய்ந்ததாகவும், சுவர்கள் இடிந்து விழுந்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே மும்பை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்பதால் வானிலை ஆய்வு மையம் ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் அவசியமின்றி வெளியே செல்ல வேண்டாம் என்றும், கனமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைள் மேற்கொள்ளுமாறு மாநில அரசு நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சர்வதேச யோகா தினம் நாளை மறுநாள் கொண்டாடப்பட உள்ள நிலையில், அதில் பங்கேற்பதற்காக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பதிவு செய்துள்ளதாக கூறியுள்ளது.

விசாகப்பட்டினத்தில் நாளை மறுநாள் நடைபெற உள்ள யோகா நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

காலை மணி 6.30 முதல் மணி 7.45 வரை இந்நிகழ்ச்சி நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மதுரைஅணி 10 ரன் வித்தியாசத்தில் நெல்லை அணியை வென்றது.

சேலத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த மதுரை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 168 ரன் எடுத்தது.

169 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய நெல்லை அணி, 18 புள்ளி 5 ஓவரில் 158 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் சேலம் அணி – சேப்பாக் அணியை எதிர்கொள்கிறது.

-----------

மாஸ்டர்ஸ் கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில் தமிழக அணி 8-0 என்ற கோல் கணக்கில் கேரளாவை வென்றது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் பஞ்சாப் 3-2 என்ற கோல் கணக்கில் புதுச்சேரி அணியை வென்றது.

மகளிர் பிரிவில் கர்நாடகா 7-0 என்ற கோல் கணக்கில் கேரளாவையும், மகாராஷ்டிரா 5-0 என்ற கோல் கணக்கில் ஹிமாச்சலப்பிரதேச அணியையும் வென்றன.

-----------

போலந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஜய் சுந்தர் பிரசாந்த் - ஸ்பெயினின் செர்ஜியோ மர்டோஸ் கோர்னஸ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் ஃபிரான்சின் **Lucas Sanchez -** ஜப்பானின் **Seita Watanabe** இணையை வென்றது.

-----------

நாட்டிங்ஹாமில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - போர்ச்சுகலின் **Jaime Faria** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை, 6-4, 1-6, 13-11 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் ஹென்ரிக் ஜெபன்ஸ் - பிரான்சின் **Albeno Olivetti** இணையை வென்றது.

--------------

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியின் மகளிர் பிரிவில் அர்ஜென்டினா 2-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

தஜிகிஸ்தானில் நடைபெற்ற 23 வயதுக்கு உட்பட்டோருக்கான நட்புணர்வு கால்பந்து போட்டியில் தஜிகிஸ்தான் 3-2 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

**<<<<The End>>>>**